DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : STC.No.3/2021 | Deposition of Witness for : PW1 |
| Name : ஞானசிங் | Father/Husband Name : கோயில்பிள்ளை |
| Age : 72 | Village : பிள்ளையான்மனை |
| Taluk : ஏரல் | Calling : விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 04 July 2026.

Accused Present.

**சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 7 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியும் என்றால் சரிதான். பாக்கியலெட்சுமி என்னுடைய மனைவி என்றால் என்னுடைய மனைவி பெயர் பாக்கியசீலி ஆகும். என்னுடைய மனைவியின் பெயரில் வங்கியில் கணக்கு உள்ளதா என்றால் உள்ளது. நான் எந்த வங்கியில் கணக்கு வைத்துள்ளேனோ அதே வங்கியில் தான் என்னுடைய மனைவிக்கும் வங்கி கணக்கு உள்ளது என்றால் சரிதான். என்னுடைய மனைவி வீட்டுவேலை தான் பார்க்கிறாரா என்றால் என்னுடைய மனைவி ஓய்வு பெற்ற ஆசிரியர் ஆவார். என்னுடைய மனைவி எந்த வருடம் ஓய்வு பெற்றார் என்றால் எந்த வருடம் ஓய்வு பெற்றார் என்ற விபரம் எனக்கு தெரியாது. சுமார் 10 வருடத்திற்கு முன்பு என்னுடைய மனைவி ஓய்வு பெற்றாரா என்றால் சரிதான்.

2. நானும் என்னுடைய மனைவியும் ஒரே வீட்டில் தான் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். என்னுடைய திருமண வாழ்க்கையில் எனக்கும் என்னுடைய மனைவிக்கும் எந்த கருத்து வேறுபாடும் கிடையாது என்றால் சரிதான். (வாதி தரப்பு வழக்கறிஞர் இந்த கேள்விக்கு தனது ஆட்சேபனை தெரிவித்தார்.)

3. எனக்கு இருதய நோய் உள்ளது என்று மருத்துவ சான்று நீதிமன்றத்தில் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. நான் இருதய நோய் உள்ளது என்று சொல்லி சமூகம் நீதிமன்றத்தை ஏமாற்றி வருகிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய மனைவி என்ன படித்துள்ளார்கள் என்றால் 12 ஆம் வகுப்பு படித்து, பின்பு Teacher Training முடித்து வேலைக்கு சென்றார்கள். நான் கொடுக்கல் வாங்கல் செய்யும் விபரம் எனது மனைவிக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் தாக்கல் செய்த புகார் மனு என்றால் சரிதான். அந்த புகார் மனுவில் எதிரி எந்த தேதியில் என்னுடைய வீட்டிற்கு வேலைக்கு வந்தார் என்று குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் எப்போது வேலைக்கு வந்தார்கள் என்று நான் கூறவில்லை. ஆஜர் எதிரிக்கும் எனக்கும் எத்தனை வருடங்கள் பழக்கம் உள்ளது என்ற விபரத்தையும் நான் புகார் மனுவில்


DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.07.04 17:26:50 +0530

குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

4. ஆஜர் எதிரி லாரியில் ஓட்டுநராக பணியாற்றி வருகிறார் என்று புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளேன், அதற்கான லாரி ஓட்டுநர் உரிமத்தை நான் பார்த்தேனா என்றால் எதிரி லாரி ஓட்டுவதை பார்த்துள்ளேன், ஓட்டுநர் உரிமத்தை என்னால் கேட்க முடியாது. எதிரி லாரி ஓட்டுவதாக நான் பார்த்ததாக கூறுவது நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி இருக்கும் ஊருக்கும் என்னுடைய ஊருக்கும் எத்தனை கி.மீ தூரம் இருக்கும் என்றால் தெரியாது. எதிரியின் குடும்ப விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னுடைய குடும்பத்திற்கு ரேசன் அட்டை உள்ளது என்றால் சரிதான். என்னுடைய ரேசன் அட்டைக்கு பொங்கலுக்கு கொடுக்கும் நலத்திட்டங்கள் போன்றவற்றை வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். நான் என்னுடைய மனைவியின் வருமானத்தை வைத்து குடும்பம் நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல, என்னுடைய வருமானத்தை வைத்துதான் குடும்பத்தை நடத்தி வருகிறேன்.

5. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தவிர வழக்கு சம்பந்தமாக வேறு ஆவணங்கள் என் வசம் இல்லை என்றால் சரிதான். நான் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படும் விபரம் மூன்றாம் தரப்பினர் யாருக்கும் தெரியாது என்றால் சரிதான். எதிரி காசோலை கொடுத்த விபரம் 3 ஆம் தரப்பினர் யாருக்கும் தெரியாது என்றால் சரிதான். எதிரிக்கும் எனக்கும் எந்தவித கொடுக்கல் வாங்கல் தொடர்பும் கிடையாது என்றாலும் எதிரிக்கும் எனது மனைவிக்கும் தான் கொடுக்கல் வாங்கல் தொடர்பு உள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் என்னுடைய மனைவியை அழைத்து விசாரித்தால் தான் பணம் யாருக்கு கொடுத்தார்கள் என்ற உண்மை விபரம் தெரியவரும் என்றால் என்னுடைய மனைவி நீதிமன்றத்திற்கு வரமாட்டார்கள். எதிரி என்னுடைய மனைவியிடம் இருந்துதான் ரூ.10,000/- கைமாற்றாக பெற்றிருந்தார் என்றால் என்னுடைய மனைவிக்கு எதிரியை தெரியாது. நான் வங்கியில் வசூலுக்காக காசோலை தாக்கல் செய்த Chellan ஐ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கு தாக்கல் செய்து சுமார் 6 வருடங்கள் ஆகிவிட்டதால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆவணங்களை பார்த்தால் நான் மேற்படி Chellan ஐ தாக்கல் செய்துள்ளேனா என்பது தெரியவரும் என்றால் வழக்கு தாக்கல் செய்து சுமார் 6 வருடங்கள் ஆகிவிட்டதால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.2 ஆவணத்தில் Account Name ஞானசிங் கோயில்பிள்ளை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ம.சா.ஆ.2 ல் எந்த தேதியில் காசோலையை வசூலுக்காக தாக்கல் செய்தேன் என்று குறிபிடப்படவில்லை என்றால் தெரியாது. ம.சா.ஆ.1 காசோலையில் மங்கபெருமாள் என்ற கையெழுத்து தமிழில் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பொதுவாக கையொப்பம் எந்த மொழியில் செய்வேன் என்றால் தமிழில் செய்வேன். ம.சா.ஆ.1 காசோலையில் மற்ற விபரங்களான Cheque விபரங்கள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால் எதிரி கொடுத்த காசோலையை நான் வாங்கிக்கொண்டேன், அதிலுள்ள காசோலை தொகையையும் பார்த்தேன். ம.சா.ஆ.1 காசோலையில் கையெழுத்து செய்த பேனாவும், விபரங்கள் எழுதப்பட்ட பேனாவும் வேறு வேறு பேனா வைத்து


DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.07.04 17:26:56 +0530

எழுதப்பட்டது என்றால் எதிரி எந்த மை பேனா வைத்து எழுதி கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. ம.சா.ஆ.1 காசோலையில் Account Number வெட்டி எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான், எதிரி என்னிடம் தரும்போதோ காசோலையில் வெட்டி எழுதிதான் தந்தார், எனக்கும் அவ்வாறு எழுதியிருப்பதற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. ம.சா.ஆ.1 காசோலையில் என்னுடைய பெயர் ஞானசிங் கோயில்பிள்ளை என்று எழுதப்படவில்லை என்றால் எழுதப்படவில்லை, கோயில்பிள்ளை என்பது என்னுடைய அப்பாவின் பெயர் ஆகும். ம.சா.ஆ.1 காசோலையில் என்ன பெயர் போடப்பட்டுள்ளது என்றால் Ganasingh என்று போடப்பட்டுள்ளது, இந்த காசோலையை என்னுடைய வங்கியில் தாக்கல் செய்து தான் எதிரியின் வங்கி கணக்கில் பணம் இல்லை என திருப்பப்பட்டது. ம.சா.ஆ.1 காசோலையில் அடித்தல், திருத்தல், பெயர் தவறு உள்ளது என்றால் சரிதான், நான் படிப்பு அறிவு இல்லாதவன் என்பதால் சில நேரம் தவறுகள் வரும். எனக்கு படிப்பு அறிவு குறைவு என்றால் சரிதான். எனக்கு அனுபவ அறிவு அதிகம் உண்டு என்றால் சரிதான். என்னுடைய வங்கி கணக்கு எண்ணின் கடைசி நான்கு இலக்கங்கள் என்ன என்றால் 1776 ஆகும். என்னுடைய மனைவியின் வங்கி கணக்கு எண் தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கில் என்னுடைய மனைவியை அழைத்து விசாரிப்பதற்கு எனக்கு எதுவும் ஆட்சேபனை கிடையாது என்றால் தெரியாது, அவர் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வரமாட்டார். என்னுடைய மனைவியிடம் எதிரி வாங்கிய ரூ.10,000/–த்தை எதிரி என்னுடைய மனைவியின் வங்கி கணக்கில் செலுத்தி முடித்துவிட்டார் என்றால் தெரியாது, என் மனைவியை எதிரிக்கு தெரியாது, என் மனைவி வெளியே வரமாட்டார். என்னுடைய மனைவியிடம் எதிரி வாங்கிய ரூ.10,000/– த்திற்காக நிரப்பப்படாமல் எதிரி கொடுத்த காசோலையை வைத்து இந்த நீதிமன்றத்தில் என் மனைவி என் மூலமாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.5 ல் வடிவு என்பவர் தான் கையொப்பம் செய்து தபாலை வாங்கியுள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பில் தேதி திருத்தம் செய்து எழுதப்பட்டுள்ளது என்றால் இல்லை.

6. நான் தற்போது என்னுடைய வீட்டில் வேலைக்கு செல்லாமல் தான் இருந்து வருகிறேன் என்றால் சரிதான். நான் எதிரிக்கு பணம் கொடுத்த தொகைக்கு Security வகைக்காக வேறு ஆவணங்கள் எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கைப் பொறுத்தவரை என்னுடைய மனைவியை விசாரித்தால் தான் உண்மை வெளியில் வரும் என்றாலும் நான் என்னுடைய மனைவி நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வரமாட்டார் என பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல, அவருக்கு வயதாகிவிட்டது. என்னுடைய மனைவி நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்தால் உண்மை விபரங்கள் தெரியவரும் என்பதால் தான் என்னுடைய மனைவி நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வரமாட்டார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய மனைவி ஆசிரியை என்பதால் நீதிமன்றத்திற்கு வந்தால் உண்மைவிபரங்கள் சொல்வார்கள் என்பதால் தான் என்னுடைய மனைவி நீதிமன்றத்திற்கு வரமாட்டார் என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய மனைவியின் வங்கி கணக்கில் எதிரி சிறுக சிறுக செலுத்தி



DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.07.04 17:27:04 +0530

ரூ.10,000/– த்தை அடைத்தற்கான ஆவணம் எதிரி தரப்பில் உள்ளது என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.1ல் அடித்தல், திருத்தல், என்னுயை பெயர் தவறாக குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை என்னுடைய நிருபண வாக்குமூலத்திலோ, புகார் மனுவிலோ, அறிவிப்பிலோ குறிப்பிடவில்லை என்றால் தெரியவில்லை. காசோலை சம்பந்தமாக வங்கியின் மேலாளரை இதுவரைக்கும் நீதிமன்றத்திற்கு அழைத்து விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எதிரியின் காசோலை சம்பந்தமாக எதிரி வங்கியின் மேலாளரை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் என்னுடைய மனைவிக்கு கொடுக்கப்பட்ட நிரப்பப்படாத காசோலையை நான் நிரப்பிக்கொண்டு பொய்யான வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி எந்த காலத்திலும் என்னிடம் ரூ.1,00,000/– கடனாக வாங்கவோ, அதற்கு காசோலை கொடுக்கவோ இல்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 செல்லாத காசோலையை வைத்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு ரூ.1,00,000/– பணத்தை வங்கியில் இருந்து எடுத்துக் கொடுத்தேனா என்றால் நான் கையில் உள்ள பணத்தைக் கொடுத்தேன். எனக்கு தனிப்பட்ட முறையில் ரூ.1,00,000/– கொடுக்க போதுமான வசதி கிடையாது என்றால் சரியல்ல. நான் வருமான வரி கட்டி வருகிறேனா என்றால் இல்லை. என்னுடைய மனைவிக்கு வருமான வரி உண்டு என்றால் தெரியாது. எனக்கும் எதிரிக்கும் எந்தவித பழக்கமும் கிடையாது என்றாலும் எதிரி என்னிடம் பணம் வாங்கினார் என்றும் காசோலையை கொடுத்தார் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரி என் மனைவியிடம் வாங்கிய ரூ.10,000/–த்திற்காக கொடுக்கப்பட்ட காசோலையை எதிரி பணம் திருப்பி கொடுத்த பின்பும் கொடுக்கமால் அதை வைத்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய மனைவி கொடுத்த பணத்தை பெற்றுக்கொண்டு காசேலை தொலைந்துவிட்டதாக கூறி எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளாதர் என்றால் சரியல்ல. காசோலை எண் எனக்கு தெரியாது என்றால் வழக்கு தாக்கல் செய்து சுமார் 6 வருடங்கள் ஆகிவிட்டதால் எனக்கு ஞாபகம் இல்லை. உண்மையிலே நான் கடன் கொடுத்து காசோலையை வாங்கியிருந்தால் காசோலை எண் எனக்கு மனப்பாடமாக தெரிந்திருக்கும், நான் அவ்வாறு எதிரிக்கு பணம் கொடுத்து காசோலை வாங்காததால் தான் எனக்கு காசோலை எண் தெரியாது என்றால் சரியல்ல. என்னுடைய மனைவியின் வங்கி கணக்கில் Statement ஐ நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் எதிரி என்னுடைய மனைவியின் வங்கி கணக்கில் பணம் போட்ட விபரம் தெரிய வரும் என்றால் சரியல்ல. என்னுடைய மனைவியின் வங்கி கணக்கு விபரங்களை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது. நான் செல்லாத காசோலையை வைத்து எதிரி மீது பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய மனைவியின் வங்கி கணக்கு பெயர் என்ன என்றால் பாக்கியசீலி ஜெசிந்தா ஆகும். என்னுடைய மனைவிக்கு பாக்கியலெட்சுமி என்ற பெயர் உள்ளதா என்றால் இல்லை. என்னுடைய மனைவிக்கு பாக்கியலெட்சுமி என்ற பெயரில் கனரா வங்கி, நாசரேத்தில் வங்கி கணக்கு உள்ளது என்றால் இல்லை. நான் நீதிமன்றத்தில் பாக்கியசீலி என்ற பெயரை மறைத்து பாக்கியலெட்சுமி

 DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.07.04 17:27:11 +0530 

என்ற பெயரில் வங்கி கணக்கு உள்ளதா குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை. என்னுடைய மனைவி பெயருக்கு நாசேரத் கனரா வங்கியில் கணக்கு எண்.1113101023005 உள்ளது என்றால் சரிதான், அவர் ஓய்வு ஊதிய தொகை அந்த கணக்கில் தான் வரவு வைக்கப்படும். நான் நீதிமன்றத்திற்கு என்னுடைய மனைவி சாட்சி சொல்ல வரமாட்டார் ஒரே குறிக்கோளாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல, என்னுடைய மனைவிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லாததால் அவர் சாட்சியம் அளிக்க வரமாட்டார். என்னுடைய காசோலையில் அடித்தல், திருத்தல் இருப்பதாலும் பெயர் மாற்றம் இருப்பதாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படக்கூடியது என்றால் சரியல்ல, வழக்கல் தாக்கல் செய்து 6 வருடங்கள் ஆகிவிட்டது, நான் எதிரிக்கு பணத்தை கொடுத்தேன், அதை திருப்பி வாங்கித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன். நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு என்னுடைய வழக்கறிஞரின் வழக்கு விபரங்களை நான்தான் கூறினேன் என்றால் சரிதான். எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்புவதற்கும் விபரங்களை நான் தான் கூறினேன் என்றால் சரிதான். எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியபோது அதில் உள்ள விபரங்களை உறுதி செய்யும் ஆவணங்களை என்னுடைய வழக்கறிஞரிடம் காண்பித்தேனா என்றால் காண்பித்தேன். என்னுடைய வழக்கறிஞர் காசோலையை பார்த்த பின்பு தான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்ப ஏற்பாடு செய்தார் என்றால் சரிதான். ம.சா.ஆ.1 காசோலையை பற்றி என்னுடைய வழக்கறிஞர் எதுவும் என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான்.

<u>**மறுவிசாரணை**</u> : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.07.04 17:27:17 +0530

Judicial Magistrate, Sathankulam.